செய்தி வெளியீடு எண்: 268 நாள் : 05.06.2015

# செய்தி வெளியீடு

## இணைய தள வழியில் புதிய ஆவின் பால் அட்டைகள் பெறுதல்

சென்னைப் பெருநகரில் நுகர்வோர் தங்கு தடையின்றி நாள்தோறும் ஆவின் பால் குறைந்த விலையில் பெறுகின்ற வகையில் ஆவின் மாதாந்திர பால் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது. ஆவின் பால் அட்டைகள் 16 ஆவின் வட்டார அலுவலகங்கள் மற்றும் 49 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. நாளொன்றுக்கு சென்னை பெருநகரில் 7.15 லட்சம் லிட்டர் பால் மாதாந்திர பால் அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றது.

நுகர்வோர் புதிய மாதாந்திர பால் அட்டைகள் பெற்றிடும் வழிமுறைகள் எளிதாக்கப்பட்டு உள்ளன. புதிய ஆவின் பால் அட்டைகள் பெற விரும்பும் நுகர்வோர் வட்டார அலுவலகங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களை தொடர்பு கொண்டு அதற்குரிய விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து இருப்பிட அல்லது அடையாள சான்றிதழ்களின் நகல்களை இணைத்து கொடுத்திட வேண்டும். அவ்விண்ணப்பங்கள் வட்டார அலுவலக ஊழியர்கள் மூலம் கள ஆய்வு மேற்காண்டு உடன் புதிய பால் அட்டைகள் வழங்கப்படும்.

மேலும் நுகர்வோர் தாங்கள் இருக்கும் இடங்களில் இருந்தவாறே இணையதளம் மூலம் புதிய பால் அட்டைகள் பெறவும், பால் அட்டைகளை மாதா மாதம் புதுப்பிக்கவும் வசதி உள்ளது. எனவே, நுகர்வோர் www.aavinmilk.com என்ற ஆவின் இணையதளத்தை அணுகி புதிய பால் அட்கைள் பெற்றிட தேவையான தங்கள் விண்ணப்பத்தை பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட அந்த விண்ணப்பங்கள் கள ஆய்வு செய்யப்பட்டு அவர்களுக்கு புதிய பால் அட்டைகள் உடன் வழங்கப்படும்.

நுகர்வோர்கள் இந்த இணையதள வசதியை பயன்படுத்தி சிரமமின்றி புதிய பால் அட்டைகள் பெற்று பயன் அடைய வேண்டப்படுகின்றார்கள்.

*****

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9